**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# வங்கக் கடலில் புயல் சின்னம்

## தமிழகத்தில் பலத்த மழை தொடரும்



நாகை மாவட்டம் பாலையூர் பகுதியில் மழைநீரில் மூழ்கியுள்ள நெற்பயிர்கள்.

**சென்னை, நவ. 14:** வங்கக் கடலில் புயல் சின்னம் உருவாகி உள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் நவ.19-ஆம் தேதி வரை மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், புதன்கிழமை (நவ. 15) 9 மாவட்டங்களில் மிக பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

செவ்வாய்க்கிழமை காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக இருந்த புயல் சின்னம் புதன்கிழமை (நவ.15) தாழ்வுமண்டலமாக வலுப்பெற்று வியாழக்கிழமை (நவ. 16) ஒடிஸா கடற்கரைக்கு நகரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இது குறித்து வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டலத் தலைவர் எஸ். பாலச்சந்திரன் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தென்கிழக்கு வங்கக் கடலில் செவ்வாய்க்கிழமை காலை காற்றழுத்த தாழ்வுப் பகுதி (புயல் சின்னம்) உருவாகி உள்ளது. அது மேற்கு -வடமேற்கு திசையில் நகர்ந்து புதன்கிழமை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதியில் ஆந்திர கடற்கரை பகுதிகளில் நிலவும். இது தொடர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக நவ.16-இல் வலுப்பெற்று வடகிழக்கு திசையில் நகர்ந்து பின்னர் ஒடிஸா கடற்கரைக்குச் செல்லும். இது புயலாக மாறுமா என்பது வியாழக்கிழமை தெரியவரும்.

**கனமழை எச்சரிக்கை** தற்போது தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் மேலும் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக செவ்வாய்க்கிழமை காலை வரை தமிழ்நாடு, புதுவை, காரைக்கால் பகுதியில் பரவலாக மழையும், 7 இடங்களில் மிதமான மழையும், 31 இடங்களில் பலத்த மழையும் பெய்தது. அதிகபட்சமாக, நாகை மாவட்டம், வேளாங்கண்ணியில் 170 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

அடுத்து வரும் இரண்டு தினங்களில் தமிழ்நாடு, புதுவை, காரைக்கால் பகுதிகளில் உள்ள கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும் மிதமான மழை பெய்யக்கூடும்.

மேலும், ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் புதன்கிழமை பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சில இடங்களில் 200 மி.மீ. வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரில் மிதமான மழை பெய்யக்கூடும்.

மன்னார் வளைகுடா, குமரி கடற்கரைப் பகுதிகளில் மணிக்கு 40 முதல் 45 கி.மீ. வரையிலும் காற்று வீசக்கூடும். ஆகவே, மீனவர்கள் புதன்கிழமைமுதல் 16-ஆம் தேதி வரை கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றார் அவர்.

**மழை அளவு:** செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு (மில்லிமீட்டரில்): வேளாங்கண்ணி 170, நாகை 150, காரைக்கால் 140, நன்னிலம் (திருவாரூர்), கடலூர், பரங்கிப்பேட்டை (கடலூர்), புதுச்சேரி தலா 120, வேதாரண்யம், திருப்பூண்டி (நாகை) தலா 110, கொடியக்கரை (மயிலாடுதுறை), சிதம்பரம் (கடலூர்), தலைஞாயிறு (நாகை), மயிலாடுதுறை, மதுராந்தகம் (செங்கல்பட்டு) தலா 100.

### புகார்களைத் தெரிவிக்கலாம்

பருவமழையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், தேவைப்படும் உதவிகளைக் கோரவும் தனித்தனி எண்களை தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் வெளியிடப்பட்ட செய்தி:

மாநில மற்றும் மாவட்ட அளவில் அவசரகால செயல்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் இயங்கி வருகின்றன. மாநில மையத்தை 1070 என்ற எண்ணிலும், மாவட்ட மையங்களை 1077 என்ற எண்ணிலும் கட்டணமில்லாமல் தொடர்பு கொள்ளலாம்.

கைப்பேசி வாட்ஸ்ஆப் செயலி வைத்திருந்தால், 94458 69848 என்ற எண் மூலமாக புகார்களைப் பதிவு செய்யலாம் என வருவாய்த் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

### ஆட்சியர்களுடன் முதல்வர் ஆலோசனை



பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசர செயல்பாட்டு மையத்தை முதல்வர் ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை நேரில் ஆய்வு செய்தார். அப்போது, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர்களை காணொலி வாயிலாக அவர் தொடர்புகொண்டு பருவமழை பாதிப்புகளையும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் கேட்டறிந்தார்.

அதிகாரிகளுக்கு அவர் வழங்கிய உத்தரவுகள் தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்தி: பருவமழைக்காக அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்படும் பொதுமக்களுக்குத் தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டுமென கூட்டத்தின் வாயிலாக மாவட்ட ஆட்சியர்களை முதல்வர் கேட்டுக் கொண்டார்.

கனமழை பெய்யக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள அமைச்சர்கள் அனுப்பி வைக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 13 மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அந்தந்த மாவட்டங்களுக்கு விரைந்து சென்று பணிகளை மேற்கொள்ள ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த முதல்வர், சென்னையில் உள்ள வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் பாலச்சந்திரனை தொடர்புகொண்டும் கனமழை தொடர்பான எச்சரிக்கைகளைக் கேட்டறிந்ததாக தமிழக அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சென்னை, திருவள்ளூரில் பள்ளிகளுக்கு விடுமுறை

கனமழையால் சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களில் பள்ளிகளுக்கு புதன்கிழமை (நவ.15) விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் கடந்த சில தினங்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பல மாவட்டங்களுக்கு செவ்வாய்க்கிழமை விடுமுறை அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமை பலத்த மழை பெய்தது. இந்த மழை அடுத்த இரு நாள்களுக்கு நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்ததையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை, திருவள்ளூர் மாவட்டங்களிலுள்ள பள்ளிகளுக்கு மட்டும் புதன்கிழமை (நவ.15) விடுமுறை அறிவித்து மாவட்ட ஆட்சியர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

EVA STALIN IAS ACADEMY

# எளிய மனிதர்களின் இலக்கியம்!



முனைவர் பவித்ரா நந்தகுமார்

**கதைகள் அப்படி என்னதான் செய்கின்றன? சில கதைகள் நம்மை வெறுத்து அழச்செய்யும். சில நம்மை நெகிழ வைக்கும். பல கதைகள் நம்முடன் விவாதம் புரியும். வேறு சில நம் உணர்வுகளை கொதித்தெழச் செய்யும். சில கதைகள் நம்மை மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தும். சில கதைகள் நம் மனசாட்சியை உலுக்கும்**

EVA STALIN IAS ACADEMY

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

## அடுத்தது யார்?

## போர்விமானங்களை அழிக்கும் 'இக்லா–எஸ்' ஏவுகணைகள் கொள்முதல்

### ரஷியாவுடன் இந்தியா ஒப்பந்தம்

**புது தில்லி, நவ.14:** எதிர்நாட்டு போர்விமானங்களைத் தாக்கி அழிக்கும் 'இக்லா–எஸ்' ஏவுகணைகளை ரஷியாவிடமிருந்து கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தை இந்தியா மேற்கொண்டிருப்பதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தன.

இந்த ரஷிய ஏவுகணைகளை 'மேக் இன் இந்தியா' திட்டத்தின்கீழ் உள்நாட்டில் தயாரிக்கவும் மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது என அவர்கள் தெரிவித்தனர்.

படைவீரர்களால் எடுத்து செல்லும் வகையிலான இக்லா ஏவுகணைகள், 5-6 கி.மீ. தொலைவில் உள்ள எதிரி நாட்டு போர்விமானங்கள், ஹெலிகாப்டர்களைத் தாக்கி அழிக்கும் திறன்கொண்டவை. இந்த ஏவுகணைகள் ஏற்கெனவே முப்படைகளிலும் பயன்பாட்டில் உள்ளது.

தற்போது, இந்த ஏவுகணைகளின் மேம்படுத்தப்பட்ட ரகமான 'இக்லா–எஸ்' ஏவுகணைகளைக் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் 5 மாதங்களுக்கு முன்னர் இந்தியா–ரஷியா இடையே கையொப்பமானது. இருப்பினும், கொள்முதல் செய்யப்படும் ஏவுகணை அமைப்புகளின் எண்ணிக்கை குறித்து தகவல் ஏதும் தெரியவில்லை என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ரஷியாவிடமிருந்து ராணுவ தளவாடங்களை பெருமளவில் இந்தியா கொள்முதல் செய்துவருகிறது. தரையிலிருந்து வானில் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் 5 'எஸ்-400' ஏவுகணை அமைப்புகளை அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி ரஷியாவிடமிருந்து கொள்முதல் செய்ய கடந்த 2018-இல் இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்தியாவிடம் விநியோகிக்கப்பட்ட முதல் ஏவுகணை அமைப்புகள் சீனா மற்றும் பாகிஸ்தான் எல்லையையொட்டிய பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளன.